SNS academy

an International CBSE Finger Print School
Coimbatore

# அறம் என்னும் கதிர்

1. முனைப்பாடியார் குறித்து எழுதுக.
    - முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப் புலவர்.
    - காலம் 13-ஆம் நூற்றாண்டு,
    - இவர் இயற்றிய அறநெறிச்சாரம் 225 பாடல்களைக் கொண்டது.
    - அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச்சாரம் எனப் பெயர்பெற்றது.

2. அறநெறிச்சாரம் கூறும் கருத்துகள் யாவை?
    - இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ள வேண்டும்.
    - ஈகை என்னும் பண்பை விதையாக விதைக்க வேண்டும்.
    - வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும்.
    - உண்மை பேசுதல் என்னும் எருவினை இட வேண்டும்.
    - அன்பாகிய நீரைப் பாய்ச்ச வேண்டும்.
    - அப்போதுதான் அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும்.
    - இளம் வயதிலேயே இச்செயல்களைச் செய்ய வேண்டும்.